# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 221/மா/2018

**நாள்: 01/04/2019**

31/10/2018 நாளிட்ட அரசியல் வார இதழ் செய்தி – தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

மாநகராட்சி அலுவலர்கள்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர். – எதிர் மனுதாரர்கள்

தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மீது புகார் தெரிவித்து 31/10/2018 நாளிட்ட தமிழக அரசியல் வார இதழில் வெளியான செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து முறையீட்டு மனு எண்.221/2018 என எண்ணிடப்பட்டு, உரிய அறிக்கைகள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மீது புகார் தெரிவித்து 31.10.2018 நாளிட்ட தமிழக அரசியல் வார இதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தியில் தஞ்சை மாநகராட்சியில் தற்காலிகமாக பணிபுரியும் அருண் என்பவர், இம்மாநகராட்சியில் உதவி பொறியாளராகப் பணிபுரியும் ரமேஷ் என்பவர் லஞ்சத்தில் ஊறி பல கோடிகள் சொத்து சேர்த்துவிட்டார் என்றும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், தன் கைப்பட எழுதி சமூகவலைத் தளங்கலில் பரவி வருவதை விசாரணை மேற்கொண்டதாகவும், அவ்விசாரணையின் போது உதவிப் பொறியாளர் திரு. ரமேஷ் என்பவர் பல்வேறு ஊழல்கள் செய்திருப்பதாகவும் இதன் வாயிலாகப் பல கோடி சொத்துக்கள் சேர்த்துள்ளதாகவும், இவருக்கு பத்து வாகனங்கள்

உள்ளதாகவும், பல ஆண்டுகளாக இதே மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும் இவரைப் போன்று பல அலுவலர்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிக்கையில் வெளியான செய்தி குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க,தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு 31.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் தனது 28.11.2018 நாளிட்ட அறிக்கையில் மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள பத்திரிக்கைக்குச்செய்தி அளித்ததாக கூறப்படும் திரு. அருண் என்பவர் இம்மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றும், இம்மாநகராட்சியின் பாதாள சாக்கடை பராமரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுவரும் மெசர்ஸ். வி.பி. அசோசியேட்ஸ், சென்னை, நிறுவனத்தின் கீழ் பணிபுரிபவர் என்றும், இச்செய்தியை திரு. யு. கரியப்பா, உதவியாளர் தூண்டுதல் பேரில் கொடுத்ததாகவும், தனக்கும் அதற்கும் தொடர்ப்பு இல்லை எனக் கூறி எழுத்து மூலம் தெரிவித்துள்ளார் என்றும் திரு. ரமேஷ், உதவிப் பொறியாளர் தனது 5.11.2018 நாளிட்ட கடிதத்தில், 2015ஆம் ஆண்டு நாகப்பட்டினம் நகராட்சியிலிருந்து அயற்பணியில் மாறுதல் பெற்று வந்துள்ள திரு. யு. கரியப்பா உதவியாளரின் தூண்டுதலால், இச்செய்தியை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் என்றும் மேலும் அவரை எம்.சி.இ.3 இருக்கையிலிருந்து முனிசிபல் காலனி வசூல் மையத்திற்கு மாறுதல் செய்ததற்கு தாம் தான் காரணம் என்ற கோபத்தில் தன்னைப் பற்றி பத்திரிக்கையில் அவதூறு செய்தி வெளியிட ஏற்பாடு செய்துள்ளார் என்றும், தன்னை மாநகராட்சியின் உதவிப் பொறியாளராக ஈர்த்துக் கொண்ட நிலையில், திரு. யு. கரியப்பா, உதவியாளர் அயற்பணியில் தொடர்வதால் காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த பத்திரிக்கைச் செய்தி வெளிவந்ததில் திரு. ஆர். எஸ். கரிகால் சோழன் மாநில பொதுச் செயலாளர், தஞ்சாவூர் என்பவரது தூண்டுதல் உள்ளதாகவும் கருத வேண்டியுள்ளது என்றும் தஞ்சாவூர் மாநகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளில் ஒரு கடையை ஏலம் இல்லாத முறையில் தனக்கு வழங்குமாறும் முந்தைய ஆணையரை மிரட்டி வந்ததாகவும், அதே போன்று, பொறுப்பு வகிக்கும் ஆணையரையும் மிரட்டி வருவதாகவும், அது சம்மந்தமாக தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டு, முதல்

தகவல் அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும், வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பத்திரிக்கையில் வெளிவந்துள்ள செய்திகள் அனைத்தும் உண்மையல்ல என்றும், ஆதாரமற்ற செய்திகள் என்றும், பத்திரிக்கைச் செய்தியில் எந்த குற்றச்சாட்டையும் குறிப்பிட்டு ஏதும் கூறவில்லை என்றும், மேலோட்டமாக, யூகத்துடன் ஆதாரமற்ற செய்தியாக கூறப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவு இனங்களை தணிக்கை செய்ய உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் உடன் நிகழ் தணிக்கைப் பிரிவு செயல்பட்டு வருகிறதென்றும் அதைபோல மாநில கணக்காயர் அலுவலக தணிக்கை அலுவலர்களாலும் ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்யப்பட்டு வருகிறதென்றும், இவ்வலுவலகத்தில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் பத்திரிக்கைச் செய்தி மற்றும் மாநகராட்சி ஆணையர் அறிக்கை அனைத்தும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. ஆணையரின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆணையரின் அறிக்கையில் திரு.கரிகால் சோழன் குறித்தும் மற்றும் உதவியாளர் திரு. யு. கரியப்பா குறித்தும் குறிப்பிட்டுள்ளார். இது புறந்தள்ளக்கூடிய செய்தியாக கருதக்கூடியதல்ல என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, தவறான தகவல்களை பத்திரிக்கைகளுக்கு வழங்கும் உதவியாளர் மீது உரிய நடவடிக்கை எடுத்திட பரிந்துரை செய்தும், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டு, பத்திரிக்கை செய்தி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை சம்பந்தமான மேல் நடவடிக்கையினைக் கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

8/4/19 8/4/19

பெறுநர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி